உ

### மஹாவித்வான்

# கோனேரிராஜபுரம் வைத்தினாதய்யர்

ஸங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கடராமய்யர்

சின்ன வைத்தி, பெரிய வைத்தி, சிவகங்கை வைத்தி, மஹா வைத்தி, வீணை வைத்தி, விகட வைத்தி என்று ஸங்கீதத்தில் புகழ்பெற்ற பல வைத்திகள் உண்டு அவர்களுள் கோனேரிராஜபுரம் வைத்தி (வைத்தினாதய்யர்) என்பவரும் அந்தத் தரத்தில் சேர்க்கப்பட வேண்டியவர். அப்படி அசாத்தியமாக பாடியிருக்கிறார். உழைத்துப் பாடியவர். இவர் பாட்டை கோயமுத்தூர் ராகவைய்யர் பாணி என்று சொல்லுவார்கள். தஞ்சை ஜில்லா குற்றாலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு சில மையில்கள் தூரத்தில் மரத்துறை என்ற ஒரு சிறிய கிராமம் உண்டு. அந்த ஊர்தான் வைத்தினாதய்யருக்கு பூர்வீகம். அந்த ஊரில் நாராயணஸாமி ஐய்யருடைய மூத்த மனைவி ஆகிய ஸீதாலக்ஷ்மி அம்மாளுக்கு பிரமாதி வருஷம் மாசிமாசம் 21ம் தேதி செவ்வாய்க்கிழமை (2-3-1880) விசாக நக்ஷத்திரத்தில் மேஷ லக்னத்தில் பிறந்தார். இவருடைய தாய்மாமா திருவிசநல்லூர் கிருஷ்ண சாஸ்திரியாவார்; மாமன் ஸாமவேதி. இவர் யஜுர்வேதி, ஆனால் ஸாமவேதத்திலும் ஆசை உள்ளவர். ஆதலால் யஜுஸ் ஸாமம் ஆக இரண்டு வேதங்களையும் ஓர் அளவுக்கு அத்யயனம் செய்தார். இவர் கௌண்டிண்ய கோத்திரம். மாமன் பாரத்வாஜ கோத்திரம்.

இவருக்கு பால்யத்திலிருந்தே பிறவி ஞானமாய் ஸங்கீதம் இருந்ததால், கோனேரிராஜபுரம் முதலிய பல ஊர்களில் சுற்றிக்கொண்டு வரும்போது இவரை எங்கு பாடச் சொன்னாலும் திண்ணையிலோ, தோட்டத்திலோ, வயல்கரையிலோ பாடிவிடுவார். இவர் வடம குலத்தவராயினும் பிறந்த ஊர் மாத்யம கிராமமாதலால், மாத்யம கிராமமாகிற கோனேரிராஜபுரம் முதலிய ஊர்களுக்கு இவர் வந்தபொழுது மாத்யம தனவான்களுடைய ஆதரவும், அன்பும் இவருக்கு மிகவும் கிடைத்தது. கோனேரிராஜபுரத்திலேயே குழந்தைவேலு என்கிற ஒரு நாகஸ்வர வித்வான் இருந்தார். ஊரில்இருந்தவர்கள் வைத்தினய்யருடைய ஸங்கீதஞானத்தைக்கண்டு குழந்தைவேலுவிடம் இவரை அனுப்பி ஸங்கீத வித்யையை கற்கச் சொன்னார்கள். குழந்தைவேலு என்பவர் போதனை செய்வதில் திறமை வாய்ந்தவர். திருப்பழனம் பஞ்சாபகேச பாகவதருக்குப் பின்னால் அற்புதமாக பாடிவந்த நல்லூர் விச்வனாதய்யர் அவர்களும் வைத்தியனாதய்யருடன் சேர்ந்து வித்தையை அப்யாசம் செய்தார். இப்படி இருக்கும்பொழுது கோனேரிராஜபுரத்தில் ஒரு பெரிய கலியாணம் நடக்கும்பொழுது அதே பந்தலில் பன்னிரெண்டு வயதாக இருந்த வைத்தியனாதருக்கு ஏழு வயதாக இருந்த அவர் மாமா பெண்ணைச் சேர்த்து வைத்து கல்யாணம் செய்தார்கள். குழத்தைவேலு நாகஸ்வர வித்வானிடம் இரண்டொரு வருஷங்கள் வித்யை கற்றுக்கொண்: பிற்பாடு மருதாநல்லூர் சின்னக்குழந்தை, பெரிய குழந்தைஸ்வாமிகளிடம் வித்யை கற்றுக்கொண்டு அவர்கள் கதையிலேயே பின்னால் பாடி ஒரு ரூபாய் அல்லது அரை ரூபாய் ஸன்மானம் பெற்றுக் கொண்டிருந்தார். குழந்தைவேலு நாகஸ்வர வித்வானுடைய பிள்ளை வைத்திலிங்கம் என்பவர் ரொம்பவும் பிரமாதமாக நாகஸ்வரம் வாசித்தார், ஆனால் பால்யத்திலேயே காலம் ஆகி விட்டார்.

பிறகு திருவிடமருதூருக்கு வந்து இரண்டொருவருக்கு வித்யையை சொல்லிக்கொடுத்து சில மாதங்களுக்குப் பிறகு கும்பகோணத்தில் நடக்கும் பாட்டுக் கச்சேரிக்கு புதுக்கோட்டை லயமேதை மான்பூண்டியபிள்ளை வந்து கஞ்சிரா வாசிக்கப் போவதை கேள்விப்பட்டு, அங்கு சென்றிருந்தார். அச்சமயம் மான்பூண்டியபிள்ளை அவர்கள் வைத்தினாதய்யரைக் கண்டு, "வைத்தா, என்னோடு வருகிறாயா, உன்னைத் தயார்

செய்து முன்னுக்குக் கொண்டு வருகிறேன்'' என்று கூப்பிட்டார். உடனே வைத்தினாதய்யர் சரி என்று ஒத்துக்கொண்டு அவரோடு திருநெல்வேலிப் பக்கம் போய்விட்டார். இங்கு தகப்பனாரோ பிள்ளையை காணும் என்று எங்கும் தேடிக்கொண்டிருந்தார். மான்பூண்டியபிள்ளை தன்னோடு வைத்துக்கொண்டு லய விஷயமானவைகளை சொல்லிக் கொடுத்து, நெரடான பல்லவிகளையும், விலம்ப காலத்தில் பல்லவிகளையும் பாடுவதற்கு சொல்லிக்கொடுத்து, தக்ஷிணாமூர்த்திபிள்ளை மிருதங்கத்துடனும் தன் கஞ்சிராவுடனும் அநேக இடங்களில் பாடவைத்தார். இப்படி இரண்டு வருஷகாலம் ஆகி விட்டது. திருநெல்வேலியில் ஒரு கல்யாணத்தில் இவர் கச்சேரி ஏற்பாடாகி இருந்தது. அந்த கல்யாணப்பத்திரிகை மரத்துறையில் இருக்கும் இவர் தகப்பனார் நாராயணஸ்வாமி ஐய்யருக்குக் கிடைத்தது. வைத்தினாதய்யர் அவர்கள் ஒருவருக்கும் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டபடியால், எல்லோரும் விசாரப்பட்டு கொண்டு தேடிக்கொண்டிருக்கும் பொழுது இப்பத்திரிகை கிடைத்தவுடன் அப்பத்திரிகையில் மரத்துறை வைத்தினாதய்யர் பாட்டு என்று போட்டிருந்ததைப் பார்த்தவுடன் தகப்பனார் நாராயணஸ்வாமி ஐய்யர் அந்த க்ஷணமே புறப்பட்டு திருநெல்வேலிக்குப் போய் கச்சேரி நடக்கும் கல்யாண வீட்டிற்கு வந்து சேர்ந்தார். பிள்ளையை தன்னுடன் வரவேண்டும் என்றழைத்தார். அவர் வரமாட்டேன் என்றார். பிறகு மான்பூண்டிய பிள்ளை, தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை இவர்களிடம் சொல்லி சிபாரிசு செய்தார். கடைசியாக தக்ஷிணாமூர்த்திப்பிள்ளையவர்கள் ஹிதமாக வைத்தினய்யருக்கு சொல்லி தகப்பனாருடன் அனுப்பித்து வைத்தார்.

பிறகு மரத்துறையில் இருந்துகொண்டு கோனேரிராஜபுரத்திற்கு அடிக்கடி வந்து கொண்டு இருக்கும் பொழுது கோனேரிராஜபுரத்தில் ஒரு பெரிய கல்யாணத்தில் ராமனாதபுரம் ஸ்ரீநிவாச ஐய்யங்கார் கச்சேரி ஏற்பாடாகியிருந்தது. அந்த ஊரார்கள் வைத்தியனாதய்யர் இடத்தில் வெகு பிரியமுள்ளவர்கள். ஆகையால், ''நம்ம வைத்தா கச்சேரியையும் வைக்க வேண்டும்'' என்று பிடிவாதமாக மறுதினம் கச்சேரியை வைத்து விட்டனர். அதற்கு வித்வான் ராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐய்யங்காரும் இருந்து கேட்டு சந்தோஷப்பட்டு இவரை ஆசீர்வாதமும் பண்ணினார். தஞ்சை ஜில்லாவில் அதுதான் இவரது முதற் கச்சேரி. அப்போது அவருக்கு 18 அல்லது 20வது வயது தான் இருக்கும். அதிலிருந்து சில வருஷங்கள் வரையில் அவரை 'மரத்துறை வைத்தா, மரத்துறை வைத்தா' என்று எங்கும் சொல்லி வந்தார்கள்.

கோனேரிராஜபுரத்தில் நடந்த முதற் கச்சேரியில் இருந்தே நல்ல பெயர் வந்து விட்டது எனலாம். பிறகு, சென்னையிலிருந்து திருநெல்வேலி வரையிலும் ஆந்திரத்தில் காகிநாட, பித்தாபுரம் வரையிலும் கச்சேரிகள் விசேஷமாக நடக்க ஆரம்பித்து விட்டன. சென்னபட்டணத்தில் தொண்டைமண்டலம் பள்ளிக்கூடத்தில் க்ருஷ்ண கான சபையின் ஆதரவில் இவருடைய பாட்டு திருக்கோடிக்காவல் க்ருஷ்ணய்யர் பிடில், தக்ஷிணாமூர்த்தி ம்ருதங்கம், மான்பூண்டியப்பிள்ளை கஞ்சிரா, பழனி க்ருஷ்ணய்யர் கடம் இந்த ஜமாக்களுடன் நடந்தபொழுது மான்பூண்டியப்பிள்ளையின் கோரிக்கையின் பேரில் எட்டுக்களை சௌக்கம் பல்லவியில் விஷம எடுப்பு எடுத்து பாடுகையில் பிடில் க்ருஷ்ணய்யர் வாசிக்கவில்லை. மறுபடியும் பல்லவியை பாடினார், ஆனாலும் வாசிக்கவில்லை. ஸ்ரீ க்ருஷ்ணய்யர் அவர்கள் ஸதஸிலேயே ''வைத்தா! மான்பூண்டியாபிள்ளை என்கிறாய் காசிக்குப் போகிறாய்! பிறகு தக்ஷிணாமூர்த்தி என்கிறாய், கன்யாகுமரி வரை போய்விட்டு வருகிறாய்! பல்லவிகளை இப்படிப் பாடுவதில் என்ன ஸௌக்கியம் இருக்கிறது என்று நினைக்கிறாய்'' என்று கேட்டார். பிறகு, திருவாரூல் பூகந்தர்வன் ரஹிமத்கான் பாட்டை சிலமுறைகள் கேட்ட பிறகு தாளத்தில் வைத்தினாதய்யர் அவர்கள் மிகவும் பரிச்ரம பட்டவராக இருந்தும் தனது கச்சேரி பந்தாவை அடியோடு மாற்றிக்கொண்டு ஸர்வஜனரஞ்சகமாகவும் எல்லோருக்கும் பூர்ண திருப்த்தியை கொடுக்கக்கூடிய சுலபமான ஸௌக்யமான வழியில் பாடத் தொடங்கி விட்டார். அதன் பிறகுதான் மேல் சொல்லிய கோஷ்டியுடன் இடைவிடாமல் கச்சேரி நடக்க ஆரம்பித்தன. பிறகு கோனேரிராஜபுரத்திலேயே ஸ்திரமாக தங்கிவிட்டார். அதிலிருந்துதான் கோனேரிராஜபுரம் வைத்தினய்யர் என்று பெயர் உண்டாயிற்று. பட்டணத்தில் க்ருஷ்ணகான சபா கச்சேரிக்குப் பிறகு திருக்கோடிக்காவல் க்ருஷ்ணய்யர் அவர்களை குருவாக வைத்துக்கொண்டு அவரையே அடிக்கடி பிடில் பக்கவாத்யமாக போட்டுக்கொண்டு அவர் வாசிப்பை கேட்டுக்கேட்டு நல்ல ஸங்கீதத்தை மனதில்

வாங்கி ஸௌக்கியமாகப் பாடி வந்தார். ரஹிமத்கான் பாட்டு கேட்ட பிறகு ''ஸங்கீதத்தை ரஹிமத் கான் தொண்டையில் வைத்துக் கொண்டிருக்கிறார், நாம் ஸங்கீதத்தை துடையில் வைத்துக் கொண்டிருக்கிறோம்'' என்று சொல்லுவார். ரஹிமத்கான் பாடும் வழியையும் பிடில் க்ருஷ்ணய்யர் அவர்கள் ஸங்கீதத்தையும் சேர்த்து ஒன்றுபண்ணி பாவபரவசத்துடன் பாடிவந்தார். ''அந்த மஹானுபாவன் திருக்கோடிகாவல் க்ருஷ்ணய்யரால் எனக்கு சிறிது ஸங்கீதம் வந்தது'' என்று என்னிடமேசில முறைகள் சொல்லியிருக்கிறார் 1920ம் வருஷம் முடிகொண்டானுக்கு ஒரு கச்சேரிக்கு வந்திருந்தபோது சற்று உடம்பு சௌகர்யம் இல்லாமல் இருந்ததால் பத்து தினங்கள் அவரை என் வீட்டிலேயே வைத்துக்கொண்டு முடிந்த வரை உபசரித்தேன், சுச்ருஷை பண்ணினேன். ஸ்ரீ பிடில் கிருஷ்ண ஐயர் மான்பூண்டியாப்பிள்ளை, இவர்கள் காலத்திற்குப் பிறகு கோவிந்தசாமிப்பிள்ளை பிடில், அழகநம்பி பிள்ளை மிருதங்கம் புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்திபிள்ளை கஞ்சிரா இவைகளுடன் விசேஷமாகப் பாடி வந்தார்.

கோனேரிராஜபுரம் வைத்தியநாதையர் அவர்களுக்கு ச்ருதி நாலரைக்கட்டை ஆகும் (F—Sharp); இந்த ச்ருதியில் ஒவ்வொரு சமயம் தாரஸ்தாயி தைவத நிஷாதம் வரையில் பிடிப்பார். பொதுவாக ஸ்தாயி சாரீரம்; கச்சேரி ஆரம்பிக்கும் பொழுது மத்தியஷட்ஜத்திலிருந்து ஒவ்வொரு ஸ்வரமாக பஞ்சமம் வரையில் பிடித்து கார்வை கொடுத்து நின்று பிறகு தாரஷட்ஜம் பிடித்து அப்பால் மெள்ள ஆதாரஷட்ஜத்திற்கு வந்து பிறகுதான் வர்ணமோ, ராகமோ, கீர்த்தனமோ பாட ஆரம்பிப்பார். இதற்குள் கச்சேரி களை கட்டிவிடும். இதனால் இவருக்கு சாரீரம் வசமில்லை என்று சிலர் சொல்வர். ஆனால் அப்படியல்ல. சுருதி சுத்தத்திற்காகவும் ஸ்வரசுத்தத்திற்காகவும் இம்மாதிரிப் பாடிப் பார்த்துக் கொள்வார். ஐந்து, ஆறு கீர்த்தனங்கள் தான் கச்சேரியில் பாடுவார். பிறகு ராகம், தானம், பல்லவி, நிரவல், ஸ்வரம் ஆகியவற்றை வெகு விஸ்தாரமாகப் பாடுவார். கச்சேரியின் முக்கிய அம்சம் இதுதான். பிற்பாடு 'அருட்பாவோ', 'பிள்ளைத் தமிழோ' அல்லது 'ச்லோகமோ' ராகமாலிகையாக பாடுவார். ராக மாலிகையில் பதங்களை ஒரே ஸ்வரஸ்தானத்தில் சொல்லி பிறகு ராகத்தைப் பாடுவது என்பது இல்லாமல் பதங்களை அடிக்கடி சொல்லிச் சொல்லி பதங்கள் ராகத்தில் மூழ்கிக்கொண்டும், நீந்திக்கொண்டும், விளையாடிக்கொண்டும் இருக்கும்படி பாடுவார். இந்த அம்சம் இவர் பாட்டில் விசேஷமானது. அதன் பின் ஜாவளி, பண், கடைசியில் தில்லானா, மத்தியில் இரண்டொரு தமிழ்ப்பாட்டுகள், இவற்றைப் பாடி மங்களம் பாடி முடிப்பார். ஒரே ராகம் நாலு கச்சேரிகளில் பாடினால் நாலு விதமாகவே இருக்கும். சமுத்திரம் போல் கற்பனை முன் கேட்கப்படாத பிடிகளும், சங்கதிகளும் வரும்; ஆச்சரியமாக இருக்கும். ஜனங்கள் அச்சமயம் ''ஆஹா''காரமிடுவர். ஸ்வரம் பாடுவதோ, சன்னல் பின்னலாய் இருக்கும். நிரவல் லயபத்தமுடன் அஸாத்ய கற்பனையுடன் இருக்கும். சாரீரத்தில் எந்தக் காலப்பிரமாணமும் பேசும். அதிசவுக்கமும் நிற்கும், துரிதகாலத்தில் ஜலதரங்க காலப்பிரமாணமும் பேசும். மத்திமகால ஸ்வரத்திற்கு அடுத்த துரிதகால ஸ்வரம், அதாவது ஒன்றுக்கு எட்டு, சில சமயங்களில் பாடுவார். அந்த ஸ்வரங்கள் ஒற்றை ஸ்வரமாகத்தான் இருக்கும். ப த நி த நி ஸ என்ற முறையில் இருக்காது.

இவர் பாட்டில் முதலாவது த்வனி கொடுப்பதுதான் அதி விசேஷமாகும். தொட்ட இடமெல்லாம் அதி ச்ருதிலீயமாக இருக்கும். உதவுபடி கமகபூர்ணமாய் இருக்கும். அஜ—சப்தமோ மண்டுக—சப்தமோ திவலை கூட இல்லாமல் ஒன்றுக்கொன்று ஒட்டியே இருக்கும். 'தம் நம்' என்கிற அக்ஷரங்களைத் தவிர ராகம் பாடுவதில் வேறு வராது. 'தம் நம்' சொல்லிப் பாடினாலும் போகப் போக இந்த அக்ஷரங்களும் வராமல் 'அகார'மாகவே பூராவும் பாடி முடிப்பார். கல்பனைப்பிடிகள் தவிர ப்ருகாக் கல்பனைகள் கடைசியில் ஏராளமாயிருக்கும். ராக விஸ்தாரம் இவ்வளவு பாடிவிட்டு ராகம் முடிப்பதுபோல் தோன்றும், ஆனால் முடிக்க மாட்டார். ராகத்தை முறுக்கு ஆற்றிவிட்டு, கற்பனை தோன்றிக் கொண்டேயிருக்குமாதலால், சிறிது, சிறிது அவரோஹணக்கிரமமாய் 'ஹாய்'யாகப் பாடி கடைசியில் ஒருவாறு முடிப்பார். இவர் பாட்டு கார்வையோடு கூடின விஸ்தாரமான ஹாய்ப் பாட்டு. ஒவ்வொரு கச்சேரியிலும் பல்லவியில் அனுலோம விலோமம் பாடுவது வழக்கமில்லை, தேவையானால் பாடுவார். ஆனால் பல்லவியை த்ருகாலம் செய்து பாடுவது

நிச்சயம். நாபியிலிருந்து நாதம் எழுப்பிப் பாடுவார். தவடை அசைப்பே காண முடியாது. ராகம் பாடும்போது விட்டுவிட்டுப் பாடாமல், துடர்ந்து பாடிக்கொண்டே போவார்.

கீர்த்தனங்களை வெகு அழகாகவும் பாவபூரிதமாகவும் பாடுவார். ஒரே கீர்த்தனம் இன்று ஒரு மாதிரியாகவும், அடுத்த முறை பாடவித்யாஸமில்லாவிடினும் ரூப வித்யாஸத்(presentation)துடன் இருக்கும். கல்யாண காலங்களில் கச்சேரிகள் முடிந்ததும் தியாகையருடைய சிஷ்யப் பரம்பரையான மிலட்டூர் சுந்தர பாகவதர், அவர் தம்பி வெங்கட்ராம பாகவதர் ஆகிய இருவரையும் வீட்டில் வரவழைத்து வைத்துக்கொண்டு சம்ரக்ஷித்து அவர்களிடம் கீர்த்தனங்களை வாய்ப்பாடமாக பாடம் செய்வார். ஸ்வரப் படுத்தி எழுதியதில்லை. ஸ்வரப்படுத்தியும் பாடம் செய்யமாட்டார். அவருடைய சிஷ்யர்கள் கோயமுத்தூர் விச்வனாதய்யர், பூதலூர் கிருணஷ்மூர்த்தி சாஸ்த்திரிகள், இந்த வியாசம் எழுதியிருக்கிற நான் ஒருவன், தேதியூர் க்ருஷ்ணமூர்த்தி, தர்மபுரி துரை ஸ்வாமி, மல்லபுரம் நாராயணசாமி முதலியவர்களாவர். தேதியூர் கிருஷ்ணமூர்த்தியும் நானும் ஜோடியாக இருந்தோம். இரவு 10 மணிக்கு மேல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு தெருவில் போகிறவர்களுக்குக் காதில் விழாமல் பொய்க்குரலில் எங்கள் இருவருக்கும் சொல்லிக் கொடுப்பார். கிருஷ்ணமூர்த்தி முன்னுக்கு வரக்கூடியவன், நன்றாய்ப் பாடினான், பாவம் அல்பாயுளில் சென்று விட்டான். ஒவ்வொரு ஸமயம் வைத்தியநாதய்யர் அவர்கள் குளத்திற்குப்போய் தன் வேஷ்டிகளை தானே ஆசை தீர துவைத்து 15 நிமிஷ காலம் ஜலத்தில் அலசி அலசி பிழிந்து வீட்டில் கொடியில் உலர்த்துவர். அவர் கரு நிறமாகவும் சுமார் 5' 4'' உயரமுள்ளவராகவும் பிற்காலத்தில் சரீரம் ஒப்பியும் இருந்தார். ஸாத்விககுணமுள்ளவர். பாபனாசம் சிவன் அவர்களுக்கு அவரிடம் அதிபக்தி. என்னைக் காட்டிலும் பாபனாசம் சிவன் அவர்களே வைத்தினாய்யரைப் பற்றி விசேஷமாகச் சொல்லக்கூடியவர். வைத்யனாதய்யரின் பாட்டைக் கேட்டவர்கள் அனேகர் மறைந்து விட்டனர். வெகு வெகு சிலரே இப்போது உளர்.

வைத்யநாதய்யரவர்களுக்கு 3 பிள்ளைகளும் 2பெண்களும் உண்டு. மூத்த பெண் இப்போது இல்லை. மூத்த பெண்ணுக்கு விவாகமும் அடுத்த பிள்ளைக்கு உபநயனமும் 1919ம் வருஷம் கோனேரிராஜபுரத்தில் வெகு விமரிசையாக நடத்தினார். அக்கல்யாணத்தில் என்னை ஒரு நாள் பாடச் சொன்னார், அந்தப் பெரிய பாக்கியம் எனக்கு கிடைத்தது.

அவருக்கு கோர்வைகள் முதலியதான விவரங்கள் தெரிந்திருந்தாலும் ஸ்வரம் ஸர்வலகுவாயும் ராகச்சாயையுடன் பாடுவார். ஸர்வலகு பாடும்போதே கைத்தாளத்தை பிடுங்குவதுபோல் இருக்கும். பாட்டில் கனம்நயம் பிகுஸுகு, கார்வை, மற்றும் எல்லா கமகங்களும் இருக்கும். பல்லவி கணிசமாகவும் முடுக்காகவும் இருக்கும். ஸம்ப்ரதாயப் பல்லவிகளைத்தான் பாடி வந்தார். இப்படி 15 வருஷ காலம் அத்புதமாகவும் ரஞ்சகமாகவும் பாடியதால், அதை கேட்டவர்களுக்கு அது இன்னும் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

ஒரு சமயம் திருச்சி ஜில்லா சீப்பளாப்புத்தூரில் ஒரு மிராசுதார் வீட்டில் கல்யாணக் கச்சேரிக்குப் போயிருந்தார். கச்சேரிக்கு முதல் நாள் மலைக்கோட்டையில் பாடினார். அதில் 'ஏ பாபமு ஜேசிதிரா' என்ற அடாணா ராகக்கீர்த்தனையை வெகு அழகாகப் பாடினார். அதைக் கேட்ட அந்த மிராசுதார் தன் வீட்டில் கல்யாணக் கச்சேரியில் அதைப் பாடவேண்டும் என்று வற்புறுத்தினார். அதற்கு ஐயர்வாள் அவர்கள் தனக்கு அது பாடமில்லை என்று சாதித்து அதைப்பாடாமலே கல்யாண கச்சேரியை முடித்துவிட்டார். பிறகு ஜாகைக்கு வந்ததும் மிராசுதாரைக் கூப்பிட்டு அந்தக் கீர்த்தனம் கல்யாணத்தில் பாடத்தகுதியில்லாதது என்று சொல்லி ஜாகையில் பாடி மிராசுதாரைத் திருப்தி செய்தார்.

ஒரு சமயம் காகிநாடாவில் ஐயர்வாள் கச்சேரி கிருஷ்ணையர் பிடிலுடனும், மறு நாள் கிருஷ்ணையர் தனிப்பிடில் கச்சேரியும் ஏற்பாடாகியிருந்தன. ஸ்ரீ கிருஷ்ணையர் தன் கச்சேரியன்று வைத்யநாதய்யரைக் கூப்பிட்டு, ''நீ என் கச்சேரிக்கு வரவேண்டாம்; நீ வந்தால் நான் மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டு வாசிக்க வேண்டிவரும். நீதான் ஒவ்வொருச் கச்சேரியிலும் என் பிடில் கேட்டுக் கொண்டிருக்கிறாயே, ஆகையினால் பேசாமல் தூங்கு'' என்று சொல்லிவிட்டுக் கச்சேரிக்குப் போய்விட்டார். ஐயரவர்கள் சிறிது நேரத்திற்கெல்லாம் புறப்பட்டுச் சென்று அவருக்குத் தெரியாமல் மறைந்து

நின்று அவர் கச்சேரி முழுவதையும் கேட்டுவிட்டு அது முடிவதற்கு சில நிமிஷங்கள்
முன்பே வந்து படுத்துகொண்டு விட்டார். வைத்யனாதய்யர்வாளவர்களுக்கு கிருஷ்
ணயர் வாசிப்பில் அவ்வளவு பிரமை.

ஸ்ரீ கிருஷ்ணயரவர்கள் ரயிலில் மூன்றாம் வகுப்பில்தான் பிரயாணம் செய்வது
வழக்கம். ஐயர்வாளவர்கள் இரண்டாவது வகுப்பில்தான் பிரயாணம் செய்வார்.
மாயவரம் வந்ததும் கிருஷ்ணயரின் டிக்கெட்டிற்கு அதிகப் பணம் தானே கொடுத்து
அதையும் இரண்டாம் வகுப்பு டிக்கெட்டாக மாற்றி கிருஷ்ணயரையும் கூடவே கூட்டிச்
செல்வார். ரயிலிலேயே அவரை வாசிக்கும்படி சொல்லிக்கேட்டு இன்புறுவார்.
கிருஷ்ணயர் வைத்யநாதய்யரைப் பார்த்து, ''வைத்தா, இரண்டாம் வகுப்பிற்கு
நிறையப் பணம் கொடுத்திருக்கிறாய், நன்றாய் அழுத்தி உட்கார்'' என்று விளையாட்
டாகச் சொல்வார். அதற்கு ஐயர்வாள் சிரித்துக்கொண்டு, ''எல்லாம் தங்கள் ஆசீர்
வாதம்தான்'' என்பார். சேத்தூர் ஜமீந்தார், சிங்கம்பட்டி ஜமீந்தார், ராமநாதபுரம்
ராஜா, பித்தாபுரம் ஜமீந்தார் இவர்களால் பெரிதும் கௌரவிக்கப்பட்டார். பித்தாபுரம்
ஜமீந்தாரினால் தோடா செய்துபோட்டு கௌரவிக்கப்பட்டார். அய்யர்வாள் வித்வான்
களால் அன்பும் மதிப்பும் கொண்டு பாராட்டப்பட்டவர். அவருக்குச் சிறிது பெரிது
கிடையாது, எல்லாம் ஒன்றுதான்.

ஒரு சமயம் சீர்காழியில் கச்சேரிக்கு கோவிந்தசாமி பிள்ளை பிடில், அழகநம்பி
பிள்ளை மிருதங்கம், பழனி ரங்கப்பய்யர் கடம், இப்படி ஏற்பாடு. சென்னையிலிருந்து வந்த
ரயில் அரை மணி தாமதமாக வந்ததால் பழனி ரங்கப்பய்யர் தாமதித்து வரும்படி
நேர்ந்தது. கச்சேரியோ நடந்து கொண்டிருந்தது. ரங்கப்பய்யர் நேரிட கச்சேரிக்கு
வந்து விட்டார். அய்யரவர்கள் அவரைப் பார்த்ததும் கச்சேரியை நிறுத்தி விட்டார்.
ரங்கப்பய்யர் சிறிது களைப்பாறி வந்து கச்சேரியில் கலந்து கொண்ட பிறகே மறுபடியும்
கச்சேரி ஆரம்பித்துப் பாடினார். இந்த மாதிரி வித்வானுக்கு மரியாதை கொடுத்து
நடந்து கொண்டதை யாவரும் பாராட்டினர். மற்றொரு சமயம் கோட்டையூர் ஜமீந்
தார் வீட்டில் கச்சேரி ஒப்புக் கொண்டு எதிர் பாராத அசந்தர்ப்பத்தினால் அடுத்த நாள்
தான் அங்கு போய்ச்சேர நேர்ந்தது. செட்டியார் மிகவும் கோபமாக இருப்பதாக
வீணை சுப்பராமய்யர் முதலியவர்கள் சொன்னதின் பேரில் தான் கச்சேரி செய்யாமலே
திரும்பிப் போய்விடுவதாகவும் தான் வந்ததே ஜமீன்தாருக்குத் தெரியப்படுத்த வேண்
டாம் என்று சொன்னார். ஆனால் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை, மான்பூண்டியாப்பிள்ளை,
பிடில் சியாமளம் அய்யர், இவர்களின் கட்டாயத்தின் பேரில் கச்சேரி செய்தார்.
ஜமீந்தார் கச்சேரிக்கு முதலில் வரவில்லை. கச்சேரியில் மிகப் பிரமாதமாக பாடி விட்ட
தால் கச்சேரி நடக்க நடக்க ஜமீந்தார் மாடியிலிருந்து படிப்படியாக இறங்கி வந்து
கச்சேரி முடிந்ததும் ஒருவருக்கொருவர் மிகுந்த திருப்தியோடு மன்னிப்புக் கேட்டுக்
கொண்டனர். அந்தக் கச்சேரி மிகப் பிரமாதமானது. அய்யரவர்கள் மதுரையில்
அடிக்கடி கச்சேரிகள் செய்வதுண்டு. அது ஸ்ரீ புஷ்பவனம் அய்யர் அதி விரை
வாக முன்னுக்கு வந்து கியாதி அடைந்து கொண்டிருந்த சமயம். புஷ்பவனம் அய்யர்
பாட்டைக் கேட்க அய்யரவர்கள் அனேக முறை அவருக்குச் சொல்லியனுப்பியும் புஷ்ப
வனம் இவர் முன் வர தயங்கினார். இதனால் அய்யரவர்கள் தன் செல்வாக்கை உப
யோகித்து ஆனைதாண்டவபுரத்தில் கோவிந்தசாமி பிள்ளை பிடில், அழகநம்பிப் பிள்ளை
மிருதங்கம், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை கஞ்சிராவுடன் புஷ்பவனம் அய்யர் கச்சேரியை
ஏற்பாடு செய்து விட்டார். அன்று புஷ்பவனம் வெகு அருமையாகப் பாடினார். அப்
போது அவருக்குக் கல்யாணம் ஆகவில்லை. அதுமுதல் இருவரும் நெருங்கிப் பழகினர்;
புஷ்பவனத்தின் கல்யாணம் சாந்தி முகூர்த்தம் ஸீமந்தம் ஆகிய ஒவ்வொரு விசேஷங்
களுக்கும் ஸ்ரீ வைத்தியனாதய்யரவர்களின் கச்சேரியே நடந்தது. திருவாரூரிலிருந்து
வந்த ஸங்கீத வித்வான் சிமிழி சுந்தரம் அய்யரை அடிக்கடி பாடச்சொல்லி அய்யர்
வாள் கேட்பதும் உண்டு.

அறந்தாங்கியிலிருந்து தேவகோட்டைக்கு ஒரு கச்சேரிக்குப் போகும் பொழுது
புதுப்பட்டி என்ற ஓர் ஊர் வழியாகப் போக வேண்டியிருந்தது. காலை மணி ஐந்திருக்
கும். வண்டிக்காரன் ஓர் செவிடு. வண்டிக்குப் பின்னால் ஒருவர் போர்வை ஒன்றைப்
போர்த்திக் கொண்டு வந்து கொண்டிருந்தார். ஐயரவர்கள் அவரைப் பார்த்து, ''இது

எந்த ஊர்'' என்று கேட்டார். அதற்கு அந்த மனிதர் ஒன்றும் பதில் பேசவில்லை. ஐயர்வாள் அதைக் கண்டு, ''அட, வண்டிக்காரன் தான் செவிடு என்றால் உனக்குமா காது கேட்காது!'' என்று சொன்னார். சில நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு ப்யூன் வந்து வண்டியை மறித்து மாட்டை அவிழ்த்து விட்டுவிட்டான். காரணம் என்னவென்று கேட்டதில் பின்னால் வந்த மனிதர் அவ்வூர் மாஜிஸ்ட்ரேட் என்றும், அவர் சொன்ன தின் பேரில் தான் வண்டியை மறித்ததாகவும் கூறினான். பிறகு கூடப் போயிருந்த சிஷ்யன் கோயமுத்தூர் விச்வநாதன் அந்த மாஜிஸ்ட்ரேட்டிடம் போய் வண்டியில் வந்தவர் இன்னார் என்று தெரிவித்து அன்று தேவகோட்டை கச்சேரிக்கு போவதாகச் சொன்னதன் பேரில் அம்மனிதர் ஓடோடியும் வந்து அய்யர்வாளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு தான் காலேஜில் மதுரையில் வாசித்துக் கொண்டிருந்த போது ஸ்ரீ பழனி க்ருஷ்ணையர் கடத்துடன் ஐயர்வாள் கச்சேரிகள் அனேக முறை கேட்டிருப்பதாகச் சொல்லி மன்னிக்கும்படி கோரியதுடன் ஆசார உபசாரங்களும் செய்து அனுப்பினார். மற்றொரு சமயம் ஆழ்வார்திருநகரியில் ஓர் கல்யாணக் கச்சேரிக்குப் போயிருந்தார். அதற்கு மன்னார்குடி சின்னப் பக்கிரியும் மேளத் திற்கு வந்திருந்தார். அன்று ஐயரவர்கள் பல்லவி ராகமாக ஷண்முகப்பிரியாவை பிரமாதமாகப் பாடினார். அதைக் கேட்ட சின்னப் பக்கிரியவர்கள் தனது கை யிலிருந்த தனக்குச் சொந்தமான பத்து பவுனால் செய்த தங்கப் பொடி டப்பியை அய்யர்வாளிடம் ஆனந்த பாஷ்பத்தோடு அதி திருப்தியுடன் அளித்து வந்தனமும் செய்தார்.

அய்யரவர்கள் சிஷ்யர்களை புத்திரனைவிட மேலாக கவனித்துக் கொள்வார். துணிமணிகள் வாங்கினால் நிறைய வாங்கி சிஷ்யனுக்கும் தனக்கும் ஒரே விதமானதாக வாங்குவார். துவைத்து உலர்த்தியிருப்பது சிஷ்யனுடையதாக இருந்தாலும் வித்தி யாசமில்லாமல் அதையே எடுத்து மேலே போட்டுக் கொண்டும் போய் விடுவார். அனேக பெரிய இடங்களில் சொல்லி சிஷ்யனுக்கும் தனியாக ஏதாவது ஸன்மானம் வாங்கியும் கொடுப்பார். இந்த வியாசம் எழுதியிருக்கும் என்னை அடிக்கடி ஏகலைவன் என்று சொல்லுவார்.

எப்படியிருந்தால் என்ன, கடைசியில் நாற்பது வயதுதான் இருந்திருக்கிறார்! 1921-ம் வருஷம் ஆரம்பத்திலிருந்து நோய்வாய் பட்டு கும்பகோணம் ஆஸ்பத்திரியில் இருந்து வைத்தியம் செய்து கொண்டார். அச்சமயம் மூன்று முறை கும்பகோணம் ஆஸ்பத்திரிக்குப் போய் நான் அவரைப் பார்த்து வந்தேன். அனேக மனிதர்களும் வித்வான்களும் வந்து பார்த்தார்கள். என்ன செய்வது! கடைசியாக 1921-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதி (5—4—1921), துர்மதி வருஷம் பங்குனி மாதம் 23, இறைவனடி சேர்ந்தார்.

